[1983 சனவரி 27

மண்டல கால்நடைப் பராமரிப்பு அலுவலகங்களில் நியமிக்கப்பட்டுள்ள ஸ்பெஷலிஸ்டுகள்.

*வினா எண். 20—திரு மா. சுப்பிரமணியன் மற்றும் திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டல கால்நடை பராமரிப்பு அலுவலகங்களில் ஸ்பெஷலிஸ்டுகள் (Specialists) என்று நியமிக்கப்பட்டிருக்கிறார்களா?

(ஆ) அவர்கள் எந்தெந்த விஷயங்களில் ''ஸ்பெஷலிஸ்ட்'' ஆக உள்ளார்கள்?

(இ) ஸ்பெஷல் பதவிகளால் செய்யப்பட்டு வருகின்ற பணிகள் யாவை?

(ஈ) அத்துறையில் நோய் ஆய்வுப் பிரிவு (Intelligence Unit) என்று இயங்கி வருகிறபோது இந்த அதிகாரிகளும் அவசியமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) முதல் (ஈ) வரை: விவரமான அறிக்கை * ஒன்று அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோய் ஆய்வுப் பிரிவு என்பதில் ஸ்பெஷ லிஸ்ட்ஸ் என்ற முறையில் பிரித்து பணி செய்ய அனுமதிக்கப் படுகின்றனரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறையில் ஸ்பெஷ லிஸ்ட்ஸ் என்ற வகையில் கால்நடை பராமரிப்புத் துறை வல்லுநர் ஒருவரும், கோழி அபிவிருத்தி வல்லுநர் ஒருவரும், நோய் புலனாய்வு வல்லுநர் ஒருவரும் நியமிக்கப்படுகின்றனர்.

திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் இந்தத் துறையில் எவ்வளவு ஸ்பெஷலிஸ்ட்ஸ் உள்ளனர். அடுத்து எவ்வளவு மண்டலத்தில் எத்தனை ஸ்பெஷலிஸ்ட்கள் இருக்கின்றனர் என்ற விவரத் தையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் 12 ஸ்பெஷலிஸ்ட்ஸ் இருக்கிறார்கள். ஒவ்வொரு மண்டலத்திலும் ஒரு ஸ்பெஷலிஸ்ட் வீதம் வேலூர் நோய் புலனாய்வுப் பிரிவில் ஒரு வல்லுநரும், தஞ்சாவூர் நோய் புலனாய்வுப் பிரிவில் ஒரு வல்லுநரும் ஆக மாத்தம் வேலூரிலும், தஞ்சாவூரிலும் இரண்டு வல்லுநர்கள் பணியாற்றிக் கொண்டு வருகின்றனர்.

---

*115 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

1983 சனவரி 27]

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு 8 இடங்களில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. தஞ்சை மாவட்டத்தில் ஒரு கால்நடை நோய் ஆய்வுப் பிரிவை ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்வாரா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நோய் புலனாய்வுப் பிரிவு வல்லுநர்கள் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படுமா என்பது. அப்படி ஆரம்பிக்க அமைச்சர் ஆவன செய்தால் அதனை கும்பகோணத்தில் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நோய் ஆய்வுப் பிரிவு அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு; ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரைசரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 உள்விதி (1)-ன் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் 6ஆவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன்:

1. திரு. க. பாலசுப்பிரமணியன்.
2. திரு. ஆர். டி. கோபாலன்.
3. திரு. ப. பொன்னுரங்கம்.
4. திருமதி தா. இராசாம்பாள்.
5. திரு. கு. ரமணி.